பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

24 05 2026 SUNDAY 6 30 PM

வணக்கம்-மாநிலச் செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பெண்களுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபடுவோர் மீது த.வெ.க அரசு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வலியுறுத்தியுள்ளார்.

2. சிறுமி பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் தொடர்புடையவர்களுக்கு அதிகபட்ச தண்டனை கிடைப்பதை தமது அரசு உறுதிசெய்யும் என்று முதலமைச்சர் திரு. விஜய் கூறியுள்ளார்.

3. மேகதாதுவில் அணை கட்ட கர்நாடக அரசு மேற்கொள்ளும் முயற்சியை தொடக்கத்திலேயே தமிழக அரசு முறியடிக்க வேண்டும் என்று திமுக வலியுறுத்தியுள்ளது.

4. மின்வெட்டை களைய உறுதியான நடவடிக்கைகளை த.வெ.க அரசு மேற்கொள்ள வேண்டும் என்று அஇஅதிமுக கேட்டுக் கொண்டுள்ளது.

5. ஆசிய இளையோர் மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா நான்கு வெண்கலப் பதக்கங்களை வென்றது.

>>>>>><<<<<<

கோவை மாவட்டம், சூலூரில் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு, 10 வயது சிறுமி படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தில் தொடர்புடையவர்களுக்கு அதிகபட்ச தண்டனையை பெற்றுத் தருவதில் பிஜேபி உறுதியுடன் இருக்கும் என்று மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

இன்று சம்பந்தப்பட்ட சிறுமியின் சொந்த ஊரான சேலம் மாவட்டம், கொளத்தூருக்கு, பிஜேபி மாநிலத் தலைவர் திரு. நயினார் நாகேந்திரனுடன்

இணைந்து சென்று குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

பெண்களுக்கு எதிரான குற்றச் சம்பவங்களில் ஈடுபடுவோர் மீது த.வெ.க. அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் டாக்டர் எல். முருகன் வலியுறுத்தினார்.

இதற்கிடையே, பாதிக்கப்பட்ட சிறுமியின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் திரு. விஜய், தொலைபேசி வாயிலாக ஆறுதல் தெரிவித்தார்.

இந்த குற்றச்சம்பவத்தில் தொடர்புடையவர்களுக்கு அதிகபட்ச தண்டனையை பெற்றுத் தர தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் தமது அரசு மேற்கொள்ளும் என்று அப்போது திரு. விஜய் உறுதியளித்தார்.

மாநில அமைச்சர்கள் திரு. விஜய் தமிழன் பார்த்தீபன், திரு. சம்பத்குமார் ஆகியோர் 7 லட்சம் ரூபாய் நிதியுதவியையும் சிறுமியின் குடும்பத்தினருக்கு வழங்கினர்.

>>>>>><<<<<<

சிறைத்துறை மற்றும் மின்வாரியங்களில் பணிபுரிபவர்களை தேவையின்றி இடமாற்றம் செய்யக்கூடாது என்று அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டிருப்பதாக மாநில அமைச்சர் திரு. நிர்மல் குமார் கூறியுள்ளார்.

இன்று, சென்னை, புழல் சிறையில் ஆய்வு மேற்கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

>>>>>><<<<<<

ஊழலற்ற நிர்வாகத்தை த.வெ.க. அரசு வழங்கும் என்று கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. காந்திராஜ் கூறியுள்ளார்.

இன்று வேலூரில் கற்பகம் கூட்டுறவு சிறப்பு அங்காடியை ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

மாற்றத்தை விரும்பியே மக்கள் த.வெ.க அரசை தேர்தெடுத்ததாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

மேகதாதுவில் அணை கட்ட கர்நாடக அரசு மேற்கொள்ளும் முயற்சியை தொடக்கத்திலேயே தமிழக அரசு முறியடிக்க வேண்டும் என்று திமுக வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக அக்கட்சியின் முதன்மைச் செயலாளர் திரு. கே.என். நேரு வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்த அணை கட்டுவதற்கான விரிவான திட்டத்தை மத்திய அரசிடம் வழங்கவுள்ளதாக கர்நாடக துணை முதலமைச்சர் திரு. டி.கே. சிவக்குமார் கூறியிருப்பத கண்டனத்திற்குரியது என்று தெரிவித்துள்ளார்.

மேகதாதுவில் கர்நாடக அரசு அணை கட்டுவது என்பது தமிழகத்திற்கு இழைக்கும் துரோகம் என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

கர்நாடக அரசின் நடவடிக்கைக்கு முதலமைச்சர் திரு. விஜய் கண்டனம் தெரிவிக்க வேண்டும் என்றும் திரு. கே.என்.நேரு அந்த அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் நிலவும் மின்வெட்டை போக்க தவெக அரசு போர்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி கேட்டுக்கொண்டுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், அறிவிக்கப்படாத மின்வெட்டால் பொதுமக்கள் மட்டுமின்றி, சிறு-குறு தொழில்துறையும் பாதிக்கப்படும் சூழல் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இப்போதுதான் ஆட்சிக்கு வந்திருக்கிறோம் என்ற சாக்குபோக்கு சொல்லாமல், மின்வெட்டை களைய தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று திரு எடப்பாடி பழனிசாமி அந்த அறிக்கையில் கோரியுள்ளார்.

>>>>>><<<<<<

தமிழகத்தின் அனல்மின் திட்டங்கள் குறித்து வெள்ளை அறிக்கையை தவெக அரசு வெளியிட வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், மாநிலத்தின் மின்தேவை அதிகரித்துள்ளதால், அதனை சமாளிக்க முடியாத நிலை இருப்பதை மின்வாரியம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரங்கள் உறுதி செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மாநிலத்தின் 84 சதவீத மின் தேவைக்கு மத்திய அரசு மின் நிலையங்களையும், தனியார் மின் நிலையங்களையும் தமிழகம் சார்ந்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

மின்வெட்டை தவிர்ப்பதற்கு உறுதியான நடவடிக்கைகளை தவெக அரசு மேற்கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

>>>>>><<<<<<

நீலகிரி, கோவை உள்ளிட்ட 19 மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒருசில பகுதிகளில் அடுத்த இரு தினங்களுக்கு பலத்த காற்றுடன் கூடிய கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர். விஆர். துரை கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

>>>>>><<<<<<

*மாவட்டச் செய்திகள்*

நாமக்கல் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து, மாநில அமைச்சர் திரு. அருண்ராஜ் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

>>>>>><<<<<<

பெரம்பலூர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளராக திரு லலித்குமார் இன்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

>>>>>><<<<<<

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி வாரச்சந்தையில் பக்ரீத் பண்டிகையை முன்னிட்டு 2 கோடி ரூபாய் அளவிற்கு ஆடுகள் விற்பனை நடைபெற்றது.

>>>>>><<<<<<

திண்டுக்கல் மாவட்டம் பழனி முருகன் கோவிலில் வைகாசி விசாக திருவிழா கொடியேற்றத்துடன் இன்று தொடங்கியது.

>>>>>><<<<<<

*விளையாட்டுச் செய்திகள்*

ஆசிய இளையோர் மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியா நான்கு வெண்கலப் பதக்கங்களை வென்றது.

வியட்நாமில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் 23 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆடவர் 130 கிலோ எடைப்பிரிவில் Hardeep-ம், 97 கிலோ எடைப்பிரிவில் ரோஹித்தும், 77 கிலோ எடைப்பிரிவில் சச்சினும் இப்பதக்கங்களை கைப்பற்றினர்.

மகளிர் 55 கிலோ எடைப்பிரிவில் Ahilya Shatrughn Shinde வெண்கலப்பதக்கம் வென்றார்.

இப்போட்டியில் இந்தியா இதுவரை 2 வெள்ளி, 4 வெண்கலப் பதக்கங்களை வென்றுள்ளது.

>>>>>><<<<<<

உலக சேலஞ்ச் கோப்பை ஜிம்னாஸ்டிக் போட்டியில் இந்தியாவின் Pranati Nayak வெள்ளிப்பதக்கம் வென்றார். உஸ்பெகிஸ்தானில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் Vault பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

>>>>>><<<<<<

ஆஸ்திரிய ஓப்பன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tanvi Patri இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார். மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர் 21-10, 21-10 என்ற செட்கணக்கில் சீன தைபேயின் Peng Yu Wei-யை வென்றார்.

>>>>>><<<<<<

உலகக்கோப்பை துப்பாக்கிச் சுடும் போட்டி ஜெர்மனியின் Munich-ல் இன்று தொடங்குகிறது. இந்தியாவின் சார்பில் Arjun Babuta, Aishwary Pratap Singh Tomar, Elavenil Valarivan உட்பட 26 பேர் இதில் பங்கேற்றுள்ளனர்.

>>>>>><<<<<<

ஆசிய ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியில் இந்தியா நான்கு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

சீனாவின் Sichuan-ன் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் 13 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் Abhyuday Arora-வும், 17 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் லோகேஷ் சுப்பிரமணியும், மகளிர் 13 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவில் Shanaya Parasrampuria -வும் Divyanshi Jain-வும் இப்பதக்கங்களை கைப்பற்றினர்.

>>>>>><<<<<<

பாங்காக் சர்வதேச இளையோர் டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Divyanshi Bhowmick பட்டம் வென்றார்.

மகளிர் 17 வயதுக்கு உட்பட்டோருக்கான பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 11-6, 11-6, 11-6 என்ற செட் கணக்கில், சீனாவின் Yao Ruixuan-ஐ வென்றார்.

>>>>>><<<<<<

Federation கோப்பைக்கான தடகள சாம்பியன் போட்டியில் தமிழகம் ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

>>>>>>END<<<<<<